கருத்தாகும். ஆகவே, 24—3—1993 ஆம் தேதி அன்று போடப்பட்டிருக்கிற ஒப்பந்தத்தை முழுவதுமாக அமல் படுத்துவதற்கு அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு, அந்த ஆலைகளைப் பொறுத்த வரையில் முழுவதுமாக நிர்வாக கோளாறுகளின் காரணமாக கடந்த ஆண்டு வழங்க வேண்டிய இரண்டு போனசும் வழங்கப்படவில்லை. சம்பளம் முழுவதுமாக பட்டுவாடா செய்யப்படவில்லை. மூன்றாவதாக 2ஆவது மில்லான பி மில்லை இன்று வரையில் ஓட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் தெரிவித்து, 1,300 தொழிலாளர்கள் பணியாற்றுகிற இந்த திருப்பூர் தனலட்சுமி ஏ மில், பி மில் ஆலைகளை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு தொடர்ந்து அந்த தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிற ஒரு சூழ்நிலையும் உருவாக்க வேண்டும். சம்பளம், போனஸ் போன்றவற்றை பட்டுவாடா செய்யக் கூடிய நல்ல சூழ்நிலையையும் உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தனலட்சுமி மில்லினுடைய "ஏ" மில் குறித்து 24—3—1993 அன்று ஏற்பட்ட அந்த ஒப்பந்தத்தை அமல் படுத்துவதிலே தொழிலாளர் நலத்துறை முழு கவனம் செலுத்தி, தொழிலாளர்கள் அந்த ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்கு நிச்சயமாகப் புரட்சித் தலைவியினுடைய அரசு முழு ஒத்துழைப்புத் தரும் என்பதையும், போனஸ் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளையும் புரட்சித் தலைவியினுடைய அரசு தீர்த்து வைக்கும் என்பதையும் அரசினுடைய அறிவிப்புகளை அரசு ஆணை எண். 1288, நாள் 20-12-1992-ல் கூறப்பட்டுள்ள அனைத்துச் சலுகைகளும் அந்த மில்லினுடைய தொழிலாளர்கள் பெறுவதற்கு தொழிலாளர் நலத்துறை முயற்சி எடுத்து பெற்றுத்தரும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

4. அறிவிப்பு.

எதிர்பாராச் செலவு நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைக்கு அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.